## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
## தங்கக் கலப்பை கொண்டு உழுத பூமி

---

வடபாரத்தை குரு மஹாராஜா மிக உன்னதமாக ஆட்சி செய்தார். அவர் உழவுத் தொழில் தடை இல்லாமல் நடப்பதில் மிக மிக கவனமாக இருந்தார். ஒவ்வொரு உழவரும் வயலைப் பக்குவம் செய்யும் முன் அவர் சிறு விழிப்புணர்வு ஊட்டும் சொற்பொழிவு தருவதும் வழக்கம். அதைக் கேட்ட பல உழவர்கள் அதன்படி விதைத்து வளர்ந்த உணவால் மக்களும் விழிப்புணர்வு பெற்றனர்.காலம் சென்றது...

குரு ராஜாவுக்கு மிகப் பெரிய ஆசை. தன் ஊர் வயல்கள் மூலம் பாரத தேசமும் உலகமும் சதா விழிப்புணர்வை ஏதோ ஒரு வழியில் பெற வேண்டும், அதுவே தன் பிறவி லட்சியம் என்று வாழ்கிறார். தன் குருவின் அறிவுரைப் படி அவர் தேவகுருவான ப்ருஹஸ்பதியை நோக்கி தவம் செய்தார். ராஜாவின் மெய்யுணர்வில் ப்ருஹஸ்பதியும் தரிசனம் தந்தார். அவரது தங்கக் கலப்பையை ஒத்த ஒரு கலப்பை வேண்டும், அது பரம ஞானத்தை உழும் கலப்பையாக இருக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தார் ராஜா.

"மகனே! நீ உன் குலகுரு முன்னிலையில் ஒரு தங்கக்கலப்பையை செய், அதில் என் சக்தி லயிக்கும்!" என்று அருளினார் தேவகுரு.அதன் படியே மஹாராஜாவும் ஏற்பாடு செய்தார்.

பின்னர் சிவபூஜை செய்து சிவனின் நந்தி வாஹனத்தை ஒத்த காளை மாட்டைப் பெற்றார். பின் எமதர்ம ராஜாவை த்யானம் செய்து அவரது எருமைக்கு ஒத்த எருமையையும் பெற்றுக் கொண்டார். பின் பராசக்தியை த்யானித்து பல விதைகளைப் பெற்றார். அவரே கலப்பையால் மாடுகளைக் கட்டி பூமியை உழுதார், பக்குவம் செய்த பின், பூமிதேவிக்கு உரிய சகல உபச்சாரங்களையும் செய்தார். விதை போடும் சமயம் மஹாவிஷ்ணுவும் அவருடன் கலந்து கொண்டார்.சரஸ்வதி ஆற்றின் தீர்த்தத்தையே உழவுக்கு இவர்கள் பயன்படுத்தினர்.பூமியும் மிக்க உத்சாகத்துடன் தன்னுள் விதைகளை வாங்கிக் கொள்ளத் தயார் ஆனது.

**என்னென்ன விதைகள் விதைத்தனர் தெரியுமா?**

1.தர்மம்

2.தவம்

3.யோகம்

4.சத்யம்
5.புலன் அடக்கம்
6.கொடை குணம்
7.மன்னிப்பு
8.சகிப்புத் தன்மை
9.த்யாகம்
10.பாரபட்சம் பார்க்காத தன்மை
11.பக்தி
12.பூர்ண ஞானம்

இவற்றை எல்லாம் மனிதர்கள் அரும்பெரும் குணங்களாகப் பெற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் விதையிட்டுப் பயிர் செய்த இடமே குருஷேத்ரம். பிற்காலத்தில் மஹாபாரதப் போர் நடக்க ஸ்ரீக்ருஷ்ணன் இந்த பூமியையே தேர்வு செய்தார் என்று இப்போது தான் புரிகிறது அல்லவா?

**மேற்சொன்ன விதைகளின் உருவகமாக மஹாபாரத வரலாற்றுப் பாத்திரங்களும் உள்ளனர்.யார் அவர்கள்?**

1.தர்மம் - தர்மன்
2.தவம் - விதுரர்
3.யோகம் - த்ரோணர்
4.சத்யம் - பீமன்
5.புலன் அடக்கம் - பீஷ்மர்
6.கொடை குணம் - கர்ணன்
7.மன்னிப்பு - த்ரௌபதி
8.சகிப்புத் தன்மை - அர்ஜுனன்
9.த்யாகம் - அரவான்
10.பாரபட்சம் பார்க்காத தன்மை - சகாதேவன்
11.பக்தி கலந்த பூர்ண ஞானம் - ஸ்ரீக்ருஷ்ணன்

அதனால் தான் பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவ்விடத்தில் **கீதையை** அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார். குரு மஹாராஜாவின் சங்கல்பம் படி அம்மண்ணில் விளைந்த கீதை இன்றும் உலகிற்கே நலவாழ்விற்கு வழிகாட்டுகிறது.

**இம்மண்ணில் தானே பீஷ்மரும் சாகும் முன் ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமத்தை உலகிற்குச் சொன்னார்?**
எனவே மனிதனின் உயர்ந்த எண்ணமான சங்கல்பம் மிக மிக முக்கியம்! எனவே வள்ளுவர் சொல்வதைப் போல நினைப்பதை உயர்ந்ததாக நினையுங்கள்!

**ஹரி ஓம்!**
**ஹரி சரணம்!**